**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 23/2023**

பெயர் : பக்கிரிசாமி P.W.1.

த/பெ. : முனியாண்டி

தேதி : 17.11.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**1ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை: –**

1. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா வீட்டை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்யக்கூடாது என கூறி தாக்கல் செய்துள்ளேன். நானும் எனது அண்ணனும் காரைக்காலில் எவ்வளவு வருடமாக வசித்து வருகிறோம் என்றால் சுமார் 20 ஆண்டுகளாக வசித்து வருகிறோம். 2ம் பிரதிவாதி எனது துாரத்து உறவினர் ஆவார். இந்த வழக்கை தாக்கல் செய்தவற்கு முன்பில் இருந்தே 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எனது தகப்பனார் எழுதிவைத்த உயில் ஆவணத்தின் படி கிடைத்தது என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் தாவா சொத்தில் உள்ள பாகத்தை நான் எனது அண்ணனுக்கு விற்பனை செய்ய முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றோ, அல்லது எனதுஅண்ணன் எனக்கு விற்பனை செய்ய முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றோ எந்த சரத்தும் இல்லை என்றால் சரிதான்.

2. எனது அண்ணன் தாவா சொத்தை விற்பனை செய்வதாக இருந்தால் நான் கிரயம் பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக கூறி நான் எனது அண்ணனுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்க போவதாக எனக்கு தகவல் தெரிந்த பின்னர் நான் எனது அண்ணனிடம் இருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றுக்கொள்ள தயாராக உள்ளேன் என்று அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து எனது தகப்பனாரால் கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். அதில் எனது பங்களிப்போ அல்லது 1ம் பிரதிவாதியின் பங்களிப்போ உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து உயில் மூலம் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கிடைக்கப்பெற்றது என்பதால் நான் தாவா சொத்தில் கூட்டுரிமையாளர் தான் என்றாலும் கூட்டு பங்குதாரர் இல்லை என்பதால் தாவா சொத்தை பொறுத்து எனக்கு வாங்கும் முன்னுரிமை இல்லை என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தில் நான் வசித்து வரவில்லை என்பதாலும் எனது

அனுபவத்தில் இல்லாததாலும் தாவா சொத்து எனது கூட்டு குடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்காக வழிகாட்டு மதிப்பீட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் தாவா சொத்தை குறைவாக மதிப்பீடு செய்து குறைந்த நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனது உறவினர் என்பதால் அவர் 3ம் நபர் இல்லை என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் தாவா சொத்தில் வசித்து வராததால் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் இடையூறு செய்வதற்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்க முற்படுவதை நான் எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் ஒரு இறப்பு நிகழ்ச்சிக்கு சென்றிருந்தபோது 2ம் பிரதிவாதி என்னிடம் கூறினார். மேற்படி விபரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்க எவ்வித கிரய ஒப்பந்தமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு உரிய பாகத்தை கிரயம் பெறுவது எனது நோக்கம் இல்லை என்றாலும், 1ம் பிரதிவாதியை இடையூறு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. 1ம் பிரதிவாதிக்கு எதிராக வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 1ம் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரமும், பாகப்பிரிவினை பரிகாரமும் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் குறைவாக மதிப்பீடு செய்து குறைவான கட்டணம் செலுத்தியுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**3,4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**